மாலை முரசு

பக்கங்கள் 18

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 04 வெள்ளிக்கிழமை 21.09.2023 அதிர்வு 52


## ஐ.நாவில் இன்று ஜனாதிபதி உரை



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று 04

# போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச நீதிப் பொறிமுறை வேண்டும்

## வடக்கு, கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டங்கள்

(எஸ்.,நிதர்ஷன், த.சுபேசன்)

இலங்கையில் போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்குச் சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதிப்படுத்தக் கோரி வடக்கு – கிழக்கில் இன்று கவன வீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 04



# சர்வதேச விசாரணைக்கு பிள்ளையான் தயாராம்!

## ஈஸ்டர் தாக்குதல் விவாதத்தில் அவரே தெரிவிப்பு



"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு நான் தயார்."

- இவ்வாறு பிள்ளையான் என்றழைக்கப்படும் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்பு தொடர்பில் எதிர்க்கட்சி கொண்டுவந்துள்ள சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெற்று வருகின்றது. 04



## கொழும்பில் இரண்டு பேர் சுட்டுக்கொலை

துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு, அவிசாவளை – தல்துவ – குருபஸ்கொட பகுதியில் நேற்றிரவு 11.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அவிசாவளையிலிருந்து கேகாலை நோக்கி 4 பேருடன் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோவை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த நால்வரும் அவிசாவளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது இருவர் உயிரிழந்துள்ளனர் 04

# யாழில் திலீபன் நினைவேந்தலுக்கு தடை கோரி மீண்டும் மனுத் தாக்கல்

**நாளை நீதிமன்றம் கட்டளை**

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கக் கோரி யாழ். பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை யாழ். நீதிவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்த நிலையில், நீதிமன்றத்தில் திரும்பவும் தடை கோரி 04





## சுவிஸில் இருந்து வவுனியா வந்த இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

- வவுனியா நிருபர் -

சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் வவுனியாவில் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா, தோணிக்கல், 04

## உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பு

### அடுத்த வாரம் புதிய திகதி அறிவிப்பு



எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 2023ஆம் ஆண்டுக்கான ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது என்று 04

# ‘சர்வதேச நீதியே எமக்கு வேண்டும்’



















இலங்கையில் போர்க்குற்றங்களை விசாரணை செய்வதற்குச் சர்வதேச நீதிப் பொறிமுறையை உறுதிப்படுத்தக் கோரி இன்று காலை யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்:– எஸ்.,நிதர்ஷன், த.சுபேசன்)

# மின் கட்டணத்தைக் குறைக்க வகுக்கப்படுகின்றன திட்டங்கள்

## மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

நாட்டின் 70 வீதமான மின்சாரத் தேவையை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்தி, மின் கட்டணத்தை குறைக்க திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி இரா ஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (20) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு-

2019 ஆம் ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட 70 வீதமான புதுப்பிக் கத்தக்க எரிசக்தி உற்பத்தி திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி, அந்த இலக்கை அடையத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப் புரை வழங்கியுள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி என்பது நாட்டின் மிகப்பெரிய ஆற்றல் மூல மாகும். அதனை அபிவிருத்தி செய் வதன் மூலம் எரிபொருளுக்காக செல விடப்படும் பணத்தை நாட்டில் தக்க வைத்துக்கொள்ள முடியும்.

எரிபொருளுக்காகச் செலவிடப்படும் தொகையைக் குறைப்பதன் மூலம் மின் கட்டணத்தை குறைக்க முடியும். இந்தப் பணத்தை ஏனைய அபிவி ருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்த லாம். நாட்டின் 70 வீதமான எரிசக்தி தேவைக்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி யைப் பயன்படுத்துவதற்கான திட்டங் கள் தயாரிக்கப்படுகின்றன.



தற்போது, கூரைகளில் அமைக்கப் பட்டுள்ள சூரிய மின்களங்களின் ஊடாக 685 மெகாவோர்ட், நிலத்தில் பொருத்தப்பட்ட சூரிய மின்களங்களி னால் 140 மெகாவோட், காற்றாலை மின் நிலையங்களின் ஊடாக 263 மெகாவோர்ட், சிறிய நீர் மின் நிலை யங்களால் 434 மெகாவோர்ட் மற்றும் பாரிய நீர்மின் நிலையங்களின் ஊடாக 1573 மெகாவோர்ட் மின்சாரம் தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கப்படு கின்றன.

சூரிய சக்தி மின்நிலையங்கள் மற்றும் காற்றாலை மின் நிலையங்கள் அமைக்கத் தேவையான இடங்களை அடையாளம் காணும் பணியை நிலை பெறு தகு வலு அதிகாரசபை ஆரம் பித்துள்ளது.

இது தவிர, தற்போது திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் முன்னேற்றத்தை ஆராயவும், அவற்றின் செயல்திறனை சரிபார்க்க வும் இராஜாங்க அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதனுடன், திட்டங்களுக்கு மிகக் குறுகிய காலததுக்குள் அனுமதி வழங்குவதற்குத் தேவையான நடை முறைகளைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங் களை இணைப்பதில் ஏற்படும் உறுதி யற்ற தன்மையைச் சமாளிக்க இந்தி யாவின் ஊடாக தெற்காசிய மின்சாரக் கட்டமைப்புடன் அதனை இணைக்கத் தேவையான ஆரம்ப கட்டச் செயற் பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எமது நாட்டில் எரிசக்தியை மேம் படுத்த சிறந்த திட்டம் தேவை. அதற்காக 2023 முதல் 2026 வரை ஒரு திட்டத்தையும், 2027 முதல் 2030 வரை அதன் தொடரான திட்டமொன் றையும் மின்சார சபை தயாரித்துள்ளது.

அதன் அடிப்படையில் தேவைக் கேற்ப உரிய திட்டங்களை மாற்றி நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். உமா ஓயா திட்டப் பணிகள் பல்வேறு காரணங் களால் தாமதமாகி வருகின்றன. ஆனால் தற்போது அதன் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளது.

எனவே, அங்கு உற்பத்தி செய்யப் படும் மின்சாரம் அடுத்த மாதத்துக்குள் பிரதான மின்கட்டமைப்பில் சேர்க் கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தவிர, அணுசக்தியில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான சாத்தியக் கூறுகளையும் அரசு ஆராய்ந்து வருகிறது. இதற்குக் காலம் பிடிக்கும். ஆனால் அதற்கான சாத்தியக்கூற்று ஆய்வை மேற்கொள்ள எதிர்பார்க்கின் றோம்.– என்றார்.

# பொலிஸாருக்குப் பயந்து ரயிலில் வீழ்ந்து உயிரிழப்பு

கம்பளை பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யச் சென்றவேளை ரயில்வே திணைக்கள ஊழியர் ஒருவர் ரயிலில் பாய்ந்து உயிரை மாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

46 வயதான நபரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான இரும்பு சிலம்பு ஒன்றை ஓட்டோவில் ஏற்றிச் சென்ற சாரதியை கம்பளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஓட்டோவில் பயணித்த சந்தேக நபர் பொலி ஸார் மறித்த போது தப்பி ஓடினார் எனவும் அவர் ரயிலில் பாய்ந்து உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற னர்.

# சிறுவன் பாலியல் துஷ்பிரயோகம்: சந்தேகத்தில் பிக்கு ஒருவர் கைது!

13 வயது சிறுவனை பாலியல் துஷ் பிரயோகம் செய்த பிக்கு ஒரு வரை பொலிஸார் கைது செய்த னர்.

கைது செய்யப்பட்டவர் போகஸ் வெவ பிரதேசத்தில் உள்ள ரஜமஹா விகாரை ஒன்றில் வாழ்ந்துவரும் பிக்கு எனத் தெரிவிக்கப்படு கிறது.

சந்தேக நபரான பிக்கு விகா ரையில் வசிக்கும் சிறுவன் ஒருவரை கொடூரமாக பாலியல் துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்தி வருகிறார் என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குத் தகவல் கிடைத்திருந்தது.

அந்தத் தகவல் தொடர்பில் விசா ரணை நடத்துமாறு சிறுவர் பாது காப்பு அதிகாரசபை எஹெட்டுவெவ பொலிஸாருக்கு அறிவித்திருந்தது.

இதன் அடிப்படையில், எஹெட்டு வெவ பொலிஸாரால் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், சந்தேக நபரான பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக் கப்பட்டார் என்று தெரிவிக்கப்படும் சிறுவன் மருத்துவ பரிசோதனைக் காக குருநாகல் போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார் என்று தெரிவிக்கப்படு கின்றது.

# அமெரிக்காவில் ரணிலுக்கு எதிராக இன்று போராட்டம்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை முன்றிலில் எதிர்ப்பு போராட்டத்திற்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பொது சபையின் 78 ஆவது கூட்டத்தொடர் நியூயோர்க்கில் நடந்துவரும் நிலையில் இன்று இரவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற இனப்படு கொலைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவும் காரணம் என வலியுறுத்தியே வட அமெரிக்க தமிழ் மக்களை அணி திரளுமாறு நாடு கடந்த தமிழீழ அரசாங் கம் அழைப்பு விடுத்துள்ளது.

"ஐ.நா பொதுச்சபை கூட்டத்தொடரில் பங்கேற்று உரையாற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நியூயோர்க் வந்தடைந் துள்ளார். வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட எமது சொந்தங்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர் எனக்கூறிய ரணிலே இன்று இனப்படுகொலையாளிகளான முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக், இராணுவ தளபதிகள் மற்றும் புலனாய்வாளர்கள் உட்பட அனை வரையும் பாதுகாப்பதற்காக பதவியில் அமர்ந்து செயற்படுகின்றார்.

தற்போதைய ஜனாதிபதி ரணிலின் ஆட்சியிலேயே வடகிழக்கில் பௌத்த மயமாக்கலும், சிங்களக் குடியேற்றமும் தீவிரமாக இடம்பெறுகின்றன.

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தியை அடித்து நொருக்குமாறும், தமிழர்களை அடித்துக் கொல்லுமாறும் உத்தரவு பிறப்பித்தவர் இன்று அமெ ரிக்காவில் உரையாற்றுவதை எம்மால் வேடிக்கை பார்க்கமுடியாது.

எம்மக்களின்உரிமைகளைபறித்தெடுத்த ரணிலுக்கு எதிராக ஐ.நா முன்றில் அணி திரள்வோம்" என்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### உயர்தரப் பரீட்சை...

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இன்று அவர் ஆற்றிய உரையின்போதே இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய குறித்த பரீட்சையின் புதிய திகதி தொடர்பான அறிவிப்பை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அடுத்த வாரத்தில் உத்தியோகப்பூர்வமாக அறிவிப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி, குறித்த பரீட்சையை பிற்போடுமாறு நாடாளு மன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன அண்மையில் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், உயர்தரப் பரீட்சையை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 22ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வரை நடத்துவதற்கான யோசனையையும் அவர் முன்வைத்திருந்தார்.

குறித்த யோசனை பரீட்சைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ள நிலையில், அது தொடர்பாக இறுதி முடிவை எடுக்கும் அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளருக்கு உள்ளது என்று கல்வி அமைச்சர் முன்னதாக குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய, உயர்தரப் பரீட்சை பிற் போடப்பட்டுள்ளதுடன், அதன் திகதி குறித்த அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இன்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச விசாரணைக்கு...

முன்னதாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்கு தல் தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள் ளப்பட்டு வரும் விசாரணைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நாடாளு மன்ற உறுப்பினர்கள் கருத்து வெளி யிடும்போது, கவனத்தில் கொள்ள வேண் டிய விடயங்கள் குறித்தும் அதன்போது தெளிவுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இன்றைய பிரேர ணையை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா முன்வைத்து உரையாற்றினார்.

இதன்போது கருத்துரைத்த அவர், "2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினமன்று பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், அதனுடன் தொடர்புடையவர்கள் இன்னும் கைது செய்யப்படாதுள்ளமை கவலையளிக்கின் றது" – என்று குறிப்பிட்டார்.

"இந்தத் தாக்குதல் தொடர்பில் ஆராய் வதற்கு ஆணைக்குழுக்கள் நியமிக்கப் பட்டிருந்த போதிலும், அதன் பரிந்துரை களை நடைமுறைப்படுத்துவதற்கு சிலர் தடையாக இருந்துள்ளனர்.

குறுகிய அரசியல் நோக்கங்களுக் காக, இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டு அப்பாவி பொதுமக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, இராஜாங்க அமைச்சர் சிவ நேசத்துரை சந்திரகாந்தன் மற்றும் அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி உள்ளிட்ட பலர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே, ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட அனைத்து சர்வதேச அமைப்புகளின் கண்காணிப்பில் இந்தத் தாக்குதல் குறித்து சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும்" – என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா வலியுறுத்தினார்.

இதனிடையே குறுக்கிட்ட இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந் தன், "என் மீது போலியான குற்றச்சாட்டுக் களைச் சுமத்த வேண்டாம். ஈஸ்டர் தாக்கு தல் தொடர்பில் நான் சர்வதேச விசார ணைக்கு முகங்கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன்." – என்று தெரிவித்தார்.

### போர்க்குற்றங்களை...

அந்தவகையில், இன்று காலை யாழ்ப்பா ணம், நல்லூர் கோயில் வீதியில் அமைந் துள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாகவும் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

உலக சமாதான தினத்தையொட்டி வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப் பட்ட இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத் தில் கலந்துகொண்ட மக்கள், "காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டும், தமிழ் மக்களை வதைக்கும் சட்டங்களை உருவாக்காதே, இந்த நாட்டில் சுதந்திர மாக வாழ வழி விடுங்கள், கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் சர்வதேச கண்காணிப்பு வேண்டும்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண் டும், உலக சமாதான தினத்தில் தமிழ் மக்களுக்குச் சமாதானம் வேண்டும், இலங்கை அரசே உண்மை, நீதி, பொறுப் புக்கூறலை உறுதிப்படுத்து, மதங்கள் கடந்த மனிதத்தை நேசிப்போம், மனித உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள்" உள்ளிட்ட பல்வேறு கோஷங்கள் எழுதப் பட்ட பதாகைகளைத் தாங்கி நின்றனர்.

போராட்ட நிறைவில் இலங்கையின் போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வ தேச நீதிப் பொறிமுறையை ஐ.நா. உறுதி செய்ய வேண்டும் எனக் கோரி ஐ.நா. அலுவலகத்தில் மகஜர் ஒன்றும் கைய ளிக்கப்பட்டது.

### சுவிஸில் இருந்து...

லக்ஸபானா வீதியில் உள்ள வீடொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுவிஸைச் சேர்ந்த 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சிறிதரன் அரவிந்தன் என்பவரே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

அவர் சுவிஸிலிருந்து விடுமுறைக் காக வந்து தனது தாயாரின் வீட்டில் தங்கியிருந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த இளம் குடும்பஸ்தர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்படுவதை அவதானித்த தாயார் வவுனியா பொலி ஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிறிதரன் அரவிந்தனின் மனைவி மற்றும் பிள்ளை சுவிஸில் வசித்து வருகின் றனர் எனவும், தற்போது அவர் குடும்பத் தைப் பிரிந்த நிலையில் விடுமுறைக்காக சுவிஸிலிருந்து வருகை தந்து தாயாரின் வீட்டில் வசித்து வந்தார் எனவும் உறவி னர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### கொழும்பில்...

என்று அவிசாவளை பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

தல்துவ பகுதியைச் சேர்ந்த 27 மற்றும் 36 வயதுடையவர்களே உயிரிழந் துள்ளனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த 42 மற்றும் 43 வயதுடைய இருவரும் படுகா யங்களுடன் அவிசாவளை வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் படுகாய மடைந்த ஒருவரை இலக்கு வைத்து இதற்கு முன்னரும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப் பட்டிருந்தது என்று பொலிஸாரின் ஆரம் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திய சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சம்பவ இடத்தில் 20 இற்கும் மேற் பட்ட ரி – 56 ரக துப்பாக்கி ரவைகள் காணப்படுகின்றன என்று தெரிவித்துள்ள அவிசாவளை பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ஐ.நாவில்...

உரையாற்றவுள்ளார்.

இலங்கை நேரப்படி இரவு 9.30 மணி யளவில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித் துள்ளது.

### யாழில் திலீபன்...

மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வந்த விசேட பொலிஸ் அதிகாரிகளும், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகளும் யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று பிரசன்னமாகி இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் திலீபன் நினை வேந்தல் நிகழ்வால் வன்முறை வெடிக் கும் ஆபத்து உள்ளது எனவும், எனவே நினைவேந்தலுக்கு உடனடியாகத் தடை விதிக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில். இது தொடர்பான கட்டளை நாளை வழங்கப்படும் என்று யாழ். நீதிவான் தெரிவித்துள்ளார்.

# திருமலையை புலிகள் இருந்தபோது உரிமை கோரியிருக்கலாம் சிங்களவர்!

## திருகோணமலைச் சம்பவத்தை அடுத்து வெளியிட்ட கண்டனத்தில் அனந்தி காட்டம்

திருகோணமலை சிங்களவர்களின் இடம் இல்லை. அது தமிழர்களுடைய மரபுவழி வந்த இடம். விடுதலைப் புலிகள் இருந்த போது சிங்களவர்கள் சொல்லி இருக்கலாம், அது சிங்கள இடம் என்று. தங்களுடைய குடியேற்றங்கள் இருக்கின்றன என்று. தற்போது யுத்தம் முடிந்து அந்தப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு, சிங்களவர்கள் மேலோங்கிப் போய் இன்றைக்கு திருகோணமலை தங்களுடைய இடம் என்று சொல்லும் அளவுக்குத்தான் சிங்களவர்களுடைய ஆதிக்கம் இருக்கிறது.

திருகோணமலையில் தியாக தீபம் திலீபனுடைய ஊர்தி மீதும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மீதும் சிங்கள காடையர்கள் வெறித்தனமாக தாக்கியது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயம்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (20) அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

அண்மைக் காலமாக, அத்து மீறிய சிங்களக் குடியேற்றம் மற்றும் புத்த விகாரைகள் அமைப்பது தொடர்பாகவும் போராட்டங்கள் நடத்தி நாங்கள் எதிர்ப்புகளை எங்களது மக்கள் காட்டிக்கொண்டு இருந்தாலும் கூட நிறைவேற்று அதிகாரம் கொண்ட



ஜனாதிபதி மௌனமாக இருப்பதுடன் இந்த சம்பவங்களையும் பார்த்தும் பாராதது மாதிரி இருக்கிறார்.

இந்திய அரசிடம் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தான் இந்த உண்ணா விரதத்தைத் தியாக தீபம் திலீபன் கடைப் பிடித்தார். இந்த உண்ணாவிரதம் இருந்தபோது விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எந்த தடையும் இருக்கவில்லை. அவர்கள் மிகவும் சுதந்திரமாக நடமாடக்கூடிய சூழ்நிலை இருந்தது.

அவர்களை இந்த இலங்கை – இந்திய ஒப்பந்தத்துக்குள் கொண்டுவர வேண்டும் என்ற காரணத்துக்காகச் சுதந்திரமாக அவர்களை நடமாட விடப்பட்டது. ஆனால், அரைகுறை விடயங்கள் தெரிந்தவர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டதாக கூறுகின்றார்கள்.

அகிம்சை நாடு என்று கூறப்படும் இந்தியா ஆயுதங்களையும் பறித்து விட்டு, திலீபன் அண்ணாவையும் மரணிக்க விட்டது.

உண்மையிலே அந்தத் தியாகியை நினைவு கூரும் எல்லோருக்குமே தெரியும், விடுதலை புலிகளுக்கு ஆயுதம் ஏந்தி போராடவும் தெரியும், தியாக வழியில் போராடவும் தெரியும் என்று அந்த தியாகியுடைய தியாகத்தைத் தெரியாத சிங்களக் காடையர் கூட்டம் இவ்வாறு செய்திருக்கிறது.

இலங்கை –இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்ட போது இருந்த காணி பூமிகள் கூட தற்போது எங்களிடம் இல்லை. இதுவே வட பகுதியில் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினருக்கு இந்த மாதிரி யாராவது செய்திருந்தால் என்ன நிலைமை என யோசித்து பாருங்கள். இலங்கையில் நீதி சிங்களவருக்கு புறம்பாகவும், தமிழருக்கு புறம்பாகவும் உள்ளது.

தமிழ் நீதிபதிகள் சொல்லும் தீர்ப்பை மீறி, நீதிமன்றத்தை அவமதிக்கும் தரப்பாகத்தான் சிங்கள இனவாதிகள் செயற்படுகின்றார்கள்.

தற்போது ஐக்கிய நாடுகள் சபை கூடிக்கொண்டு இருக்கின்ற இந்த நேரத்தில், ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு சிங்கள காடையர்கள், 83 ஆண்டு தமிழர்களை தாக்கி அழித்தது போல செயற்பட்டுள்ளார்கள். நாகரீகமான காலத்தில் கூட அநாகரீகமான முறையில் நடக்கக் கூடிய சிங்கள காடையர்கள் தான் இந்த மண்ணில் இருக்கின்றார்கள்.– என்றுள்ளது.



# பேருந்து எரிந்து நாசம்...!

யாழ்ப்பாணம் – மானிப்பாய் பொலிஸ் பிரிவிலுள்ள ஆனைக்கோட்டை பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

இந்த அனர்த்தம் இன்று (21) அதிகாலை 3.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்து ஆனைக்கோட்டை, சாவல்கட்டு பகுதியில் உரிமையாளர் வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதே தீப்பிடித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஈழத் தமிழருக்கு நல்லதல்ல

இந்தியாவின் காலிஸ்தான் ஆதரவுத் தீவிரப் போக்கு கொண்ட இருவர் அடுத்தடுத்து கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்கள் கனடா மற்றும் இந்தியா நாடுகளிடையே ராஜதந்திர முறுகலைக் கொண்டு வந்திருக்கின்றது.

ஒரு நாட்டின் பயங்கரவாதியாகச் சித்திரிக்கப்படுபவர், இன்னொரு நாட்டில் கௌரவ மனிதராக மதிக்கப்பட்டு, பேணப்படுவதும், அதை ஒட்டி நாடுகளுக்கு இடையில் முரண்பாடுகள், சர்ச்சைகள் ஏற்படுவதும் இப்போது வழமையாகி வருகின்றது.

இங்கு, கனடாவில் முதலில் கொல்லப்பட்ட ஹர்தீப் சிங் நிஜார் இந்தியாவின் காலிஸ்தான் பிரிவினைத் தரப்புகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்தவர். எனினும் அவர் கொல்லப்பட்ட சமயம் கனடாப் பிரஜை. கனடாப் பிரஜை ஒருவரை அதே கனடா நாட்டில் வைத்து சுட்டுக் கொல்லும் போது, அதில் இன்னொரு நாட்டின் நேரடி சம்பந்தம் இருக்குமானால் நிச்சயமாக அது ராஜதந்திர சர்ச்சைக்குரியதாகி விடுகின்றது.

ஆனாலும், உரிய மட்டத்தில், சட்ட முறைப்படி, விசாரணைகளை நடத்தி, உண்மையைக் கண்டுபிடிக்க முன்னர் - தீர்க்கமான முடிவொன்று எட்டப்பட முன்னர் - ஒரு நாட்டின் மீது எடுத்த எடுப்பிலேயே குற்றஞ்சுமத்தி, பகிரங்க ரீதியில் கருத்து வெளியிடலாமா என்பதும் நியாயமான கேள்விதான்.

அதேசமயம், இந்திய வம்சாவளியினராக இருந்து கொண்டு, இன்னொரு நாட்டுப் பிரஜையாக மாறிவிட்டார் என்பதற்காக, அந்த இன்னொரு மண்ணில் இருந்தவாறு, இந்தியாவுக்கு எதிரான நியாயமற்ற - இந்திய சட்டங்களுக்கு மாறான - பிரிவினை நடவடிக்கையை ஒருவர் முன்னெடுப்பதை இந்தியா வெறுமனே பார்த்திருக்க வேண்டும் என்று நியாயம் கூறுவதும் எவ்வளவு தூரம் நீதியானது, தர்க்க ரீதியானது என்ற கேள்வியும் உள்ளது.

ஒஸாமா பின்லேடன் அமெரிக்கப் பிரஜை அல்லர். இன்னொரு நாட்டவர். இன்னொரு நாட்டில் வைத்து அமெரிக்கப் படை ஊடுருவி அவரைக் கொன்றது. அதற்காக எந்த நாடும் அமெரிக்காவுடன் ராஜதந்திர முரண்பாடுகள் - முறுகல்கள் - சர்ச்சைகளுக்கு - போகவில்லை.

அதற்காக சுட்டுக் கொல்லப்பட்ட காலிஸ்தான் தீவிரப் போக்காளர் ஹர்தீப் சிங் நிஜாரை அப்பட்டமாக ஒஸாமா பின்லேடனுடன் ஒப்பிட முடியுமா என்பது வேறுவிடயம்.

எனினும் ஒரு நாட்டின் பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கப்படுவோரை இன்னொரு நாடு அரவணைத்து வைத்திருக்கும் போது இத்தகைய சர்ச்சைகள் எழுவது தவிர்க்க முடியாத தாகின்றது.

இப்போது காலிஸ்தான் தீவிரவாதப் போக்கும் கொண்ட மற்றொரு போராளி அதே போல கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

அதுவும், இந்த நபர் உட்பட சிலரை தேடப்படும் குற்றவாளிகளாக இந்தியா உத்தியோகபூர்வமாக அறிவித்து சில நாள்களின் பின்னர் -

முதல் சீக்கிய பிரமுகர் ஹர்தீப் சிங் நிஜார் கொல் லப்பட்டமையைத் தொடர்ந்து கனடா - இந்தியா இடையே ராஜதந்திர முறுகல் ஏற்பட்ட கையோடு - இந்த இரண்டாவது சம்பவம் நடந்திருக்கின்றது.

இந்தியா - கனடா இடையே முறுகலைத் தீவிரப் படுத்தச் செய்வதற்கு மூன்றாவது வெளிச்சக்தி கூட இந்த இரண்டாவது தாக்குதலையும் முன்னெடுத்திருக்கலாம் என்ற சந்தேகம் கூட கிளப்பப்படுகின்றது.

இவ்வாறு பன்முகப் பிரச்சினை கொண்ட ராஜதந்திர விவகாரமாக கனடா - இந்தியா முரண்பாடும் மாறி உள்ளது.

ஈழத் தமிழர் பிரச்சினையில் கரிசினை உள்ள - ஈழத் தமிழருக்கு அதிகம் வேண்டப்பட்ட - இரு நாடுகள் தங்களுக்குள் முரண்படுவது தமிழருக்கு நல்லதல்ல.

## பூநகரியிலுள்ள உணவகங்களில் சுகாதாரக் குழுவினர் பரிசோதனை

(த.சுபேசன்)

பூநகரியிலுள்ள கடற்கரைச் சுற்றுலா உணவகம் மற்றும் வாடியடிப்பகுதி உணவகங்கள் ஆகியன பூநகரி மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான பொதுசுகாதார பரிசோதகர் குழுவினால் திடீர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது உணவகங்களின் சுகாதார மேம்பாட்டுக்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டது. சுகாதாரப் பாதுகாப்பு இன்றி தயார் செய்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சிற்றுண்டிகள் அழிக்கப்பட்டு விரைந்து சீர் திருத்துவதற்கான கால வரையறைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் உணவு கையாளும் ஊழியர்களின் தற் சுகாதாரம் பேணல் குறித்து எச்சரிக்கப்பட்டது.

உணவகங்களின் இறுதிக் கழிவகற்றல் போன்ற வற்றை சரியாகக் கடைப்பிடிக்காதவர்கள் எச்சரிக் கப்பட்டனர்.

தொடர் கண்காணிப்புகளில் சுகாதார நடைமுறைகளை மீறிப் பொது மக்களின் உணவுச் சுகாதாரத்தை கேள்விக் குறியாக்குபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலக சமாதான தின நிகழ்வு

(மஸ்கெலியா நிருபர்)

உலக சமாதான தினம் இன்று (21) ஆகும். இதனை முன்னிட்டு நாளை மறுதினம் 23 ஆம் திகதி ஹட்டன் நகரில் ஊர்வலம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

இலங்கை சமாதானப் பேரவை நுவரெலியா மாவட்ட கிளை நாளை மறுதினம் 23 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஹட்டன் நகரசபை முன்றலில் இருந்து மல் லியப்பூ சந்திவரை சமாதான பாத யாத்திரையை நடத் தவுள்ளது.

அத்துடன் வீதி நாடகமும் இடம்பெறவுள்ளது என்று நுவரெலியா மாவட்ட இயக்குனர் திருமதி இரேஷா தெரிவித்தார்.

அன்றைய தினம் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சமாதான பேரவை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## காத்தான்குடி மெத்தைப்பள்ளிக்கு மாகாண மட்டத்தில் சிறப்பு விருது

(எம்.எம்.ஜெஸ்மின்)

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட பாடசாலையில் நடைபெறும் "சிறந்த செயற்பாடுகள்" தொடர்பான மதிப்பீட்டில் பங்கு பற்றி தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர், ஆசிரியர்க ளுக்கு விருது வழங்கும் நிகழ்வு திருகோணமலையி லுள்ள கிழக்கு மாகாண கல்விப் பணிமனையில் மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது காத்தான்குடி மெத்தைப்பள்ளி வித்தியாலயத்தின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

## கல்முனை மாநகர சபையில்

# நிதி கையாடல் விவகாரம்; இருவருக்கு விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர நிதி மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைதான முன்னாள் ஆணையாளர் மற்றும் முன்னாள் கணக்காளரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 04 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வழக்கு நேற்று புதன்கிழமை(20) கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ். எம். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றப்புலனாய்வு பிரிவினர் மற்றும் பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளின் விண்ணப்பங்களை ஆராய்ந்த நீதிவான் கைதான முன்னாள் ஆணையாளர் மற்றும் முன்னாள் கணக்காளரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் ஏற்கனவே குறித்த வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 3 மற்றும் 4 ஆம் சந்தேக நபர்களான மாநகர சபை சிற்றூழியர்கள் பல்வேறு நிபந்தனையின் கீழ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் குற்றப்புலனாய்வு பிரிவினர் மன்றுக்குச் சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் சட்டத்தரணி அபூபக்கர் றகீப்புக்கு வெளிநாடு செல்வதற்குப் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபையின் நிதி மோசடி விவகாரம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் நால்வர் கைதாகி இருந்தனர்.

இதில் ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.ஏனைய மூன்று சந்தேக நபர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி திருகோணமலையில் வைத்து முன்னாள் கணக்காளர் ஏ.எச். முகமது தஸ்தீக் (வயது-47) கைதானார்.

கடந்த காலங்களில் இவ்வரி மோசடி தொடர்பில் விசாரணைகள் பல தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் பலர் கைது செய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த நிதி கையாடல் சம்பவம் தொடர்பில் கடந்த காலங்களில் கல்முனை பொலிஸ் நிலையம், அம்பாறை விஷேட குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் விசாரணை பொறுப்பளிக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் குற்றப்புலனாய்வு பிரிவிடம் இவ்வழக்கு விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இரு நாள்கள் 3 வீடுகளை உடைத்து மட்டக்களப்பில் 78 பவுண் அபேஸ்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசங்களில் இரு தினங்களில் 3 வீடுகள் உடைத்து 78 பவுண் தங்க ஆபரணங்கள், பணம், ரிவி, காஸ் சிலின்டர் என்பன திருடப்பட்டுள்ளன என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஒருவரைப் பொலிஸார் நேற்றுக் (20) கைது செய்துள்ளனர்.

றொசாரியர் வீதியில் உள்ள மரணம் இடம்பெற்று 7 தினங்களான வீடு ஒன்றில் சம்பவதினமான செவ்வாய்க்கிழமை இரவு நித்திரையில் இருந்த போது வீட்டின் உள்நுழைந்த திருடர்கள் அங்கு அலுமாரியில் இருந்த நகைகள் மற்றும் ஒரு தொகைப் பணத்தைத் திருடியுள்ளனர்.

அதேவேளை மாமாங்கம் பிரதேசத்தில் வீட்டை பூட்டிவிட்டு வெளிநாட்டிலுள்ள அவரது பிள்ளைகளை பார்ப்பதற்காக சென்று 3 மாதங்களின் பின்னர் சம்பவதினமான செவ்வாய்க்கிழமை வீடுக்கு வந்து பார்த்தனர். இதன் போது வீட்டின் கூரையை உடைத்து அங்கிருந்த 52 இஞ்சி ரிவி, காஸ்சிலிண்டர் போன்றவற்றைத் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் நகர் பகுதியில் வீட்டை பூட்டிவிட்டு திருகோணமலைக்கு சென்று வீடுதிரும்பிய போது அங்கு வீட்டின் கதவை உடைத்து அங்கிருந்த நகைகளைத் திருடியுள்ளனர் என்று முறையிடப்பட்டுள்ளது.

சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவித்தனர்.

# மகாவலி அதிகார சபையின் காணியை மாற்ற லஞ்சம்!

## பதில் முகாமையாளர் கைதானார்

75,000 ரூபாவை லஞ்சமாக பெற்றதாகக் கூறப்படும் நொச்சியாகம மகாவலி அதிகார சபையின் பதில் முகாமையாளர் லஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழுவால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணியை ஒருவருக்கு மாற்றுவதற்காக இந்தத் தொகையை லஞ்சமாக பெற்றுக்கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சோதனைக்கு உட்படுத்தப்பட்ட அவர் கைது செய்யப்பட்டார் என்று ஆணைக் குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




# சமூக நல்லிணக்கத்துக்கான முன்னோடி திரைப்பட விழாவில் கல்முனை மாணவர்

**( எம்.எம்.ஜெஸ்மின்)**

சர்வதேச திரைப்பட விழாவில் “பிராந்தியத்தில் சமூக நல்லிணக்கத்தை வளர்ப்பது” எனும் தொனிப்பொருளில் சமூக ஒருங்கிணைப்பு மற்றும் அமைதியை வலுப்படுத்துதல் நோக்கங்களைக் அடிப்படையாக கொண்டு இலங்கையில் அனைவரையும் உள்ளடக்கிய, அமைதியான மற்றும் வளமான சமூகத்துக்குப் பங்களிக்க இந்த திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை , மட்டக்களப்பு , திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் திரையிடப்படவுள்ளது.

சர்வதேச திரைப்பட விழாவை முன்னிட்டு அண்மையில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சமூக நல்லிணக்க மையத்துடன் இணைந்து நடத்தப்பட்ட திரைப்பட விழாவில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

உயர்தரப் பிரிவில் வரலாறு மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாட மாணவிகளின் கற்றல் செயற்பாட்டின் ஒரு அங்கமாக அவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸின் வேண்டுகோளுக்கு இணங்க இவர்கள் கலந்து கொண்டமை குறிப்படத்தக்கது.

# எரிபொருள் நிரப்பு நிலையம் பொகவந்தலாவவில் திறப்பு

**(மஸ்கெலியா நிருபர்)**

பொகவந்தலாவவில் நாளை மறுதினம் (23) எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

பல தசாப்தங்களாக எரிபொருள் நிலை யம் இல்லாத நிலையில் வாகன ஓட்டுனர்கள், உரிமையாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு ஆளாகியிருந்தனர்.

அத்தோடு ஹட்டன் பலாங்கொடை பிரதான வீதியில் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான வாகனங்கள் பயணிக்கின்றது.

இந்த நிலையில் பொகவந்தலாவ நகரை மையப்படுத்தி எதிர்வரும் 23 ஆம் திகதி எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

திறப்பு விழா நிகழ்விற்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் இராமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# விஞ்ஞான வினாடிப் போட்டியில் கல்முனைப் பாடசாலை முதலிடம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

பேராதனை பல்கலைக்கழக விவசாய பீடம் அம்பாறை மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளுக்கு இடையில் ஒழுங்கு செய்திருந்த விஞ்ஞான வினாடி வினா போட்டியில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

இந்த் விஞ்ஞான வினாடி வினா போட்டியில் இக் கல்லூரியைச் சேர்ந்த 5 மாணவிகள் பங்கேற்றிருந்தனர்.




### ஐ.நா. தீர்மானங்கள் நடைமுறைக்கு வரவில்லை

# ‘மனித உரிமை மதிக்கப்பட வேண்டும்’ மன்னாரில் மாபெரும் கவனவீர்ப்பு

### உலக சமாதான நாளான இன்று

(மன்னார் நிருபர்)

உலக சமாதான நாளான இன்று வியாழக்கிழமை(21) மன்னாரில் மாபெரும் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானங்களை இலங்கை அரசு ஒப்புக் கொண்டு நீண்ட காலங்களாகியும் அவற்றை உரியவாறு நடைமுறைப்படுத்தவில்லை.

எனவே உண்மையைக் கண்டறிதல், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களில் மிகுந்த கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பதுடன், மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் குறித்த கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை (21) முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் சிவில் அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், மீனவ அமைப்புக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் அருட்தந்தையர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் யாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்களும் கலந்து கொண்டனர்.















# அம்பாறை சமுர்த்திப் பணிப்பாளர் மட்டக்களப்புக்கு கடமைசார் விஜயம்

**(கல்முனை நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தின் சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் மட்டக்களப்பு மாவட்டத்தின் பதில் சமுர்த்தி பணிப்பாளர் கடமைக்காக அலுவலக விஜயத்தை (15)வெள்ளிக்கிழமை மேற்கொண்டார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கை நடத்தியிருந்தார்.

ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுகளில் காணப்படுகின்ற முயற்சியான்மை பயனாளிகளின் வாழ்வாதார வேலைத்திட்டங்களை பார்வையிட்டார்.

இதன்போது ஆரையம்பதி சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் கே.நவரஞ்சன், கொக்கட்டிச்சோலை சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் எம்.புவிராஜ், அரையம்பதி வங்கி வலய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது முயற்சியான்மை பயனாளிகளுக்குப் பலதரப்பட்ட விளக்கங்களும் தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன. தங்களுடைய தொழில்சார் நடத்தைகள் தொடர்பாகவும் கணக்கு வைப்புக்கள் தொடர்பாகவும் மக்களுக்கும் சமுர்த்தி வங்கிகளுக்கும் இடையில் காணப்படும் தொடர்புகள் குறித்தும் விளக்கமளித்தார்.

# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிக்கு மூன்று செயற்றிறன் விருதுகள்

**(கே.எ. ஹமீட், நூருல் ஹுதா உமர், எம்.எம். றம்ஸீன்)**

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு வெளி நோயளர், விடுதி, இறப்பு கண்காணிப்பு செயல்முறைக்காக சிறந்த மூன்று செயல்றிறன் தகுதி சான்றிதழ்கள் கிடைக்கப்பெட்டுள்ளன.

கொழும்பு நாரஹேனபிட்டி இரத்த வங்கி கேட்போர் கூடத்தில் வைத்து இவை வழங்கி வைக்கப்பட்டன.

தொற்றாநோய் பிரிவின் தேசிய காய தடுக்கும் கண்காணிப்பு செயல்முறையின் கீழ் 2022 ஆம் ஆண்டின் மாவட்ட மற்றும் மாகாண நிறுவனங்களிடையே மேற்கொள்ளப்பட்ட சிறந்த செயற்றிறனுக்கான தேசிய மதிப்பாய்வு விருது வழங்கும் விழாவின் போது சிறந்த செயற்றிறன் தகுதி சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை சார்பாக தொற்றா நோய் பிரிவு மற்றும் பொது சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் கலந்து கொண்டிருந்தார்.



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.எஸ். ஆர்.ரீ.ஆர்.றஜாப் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கீழ் பல்வேறுபட்ட விருதுகளையும் சிறப்புச் சான்றிதழ்களையும் வைத்தியசாலை பெற்று வருகிறது.



# வியர்வை படிந்திருக்கும் இரத்தின கற்கள்...!

“உங்களுக்கு என்னப்பா! இரத்தினகல் வியாபாரம் தானே..!” இவ்வாறு எமது சமூகத்தில் அறைக்கூவல் விடுவதே இலகு அதன் பின்னால் இருக்கும் உழைப்பும் வேதனையும் அவ்வளவு எளிதில் எவராலும் அறிந்திட முடியாது.

கோமேதகம், மரகதம், வைரக்கல், நீலமாணிக்கம், புஷ்பராகம், வைடூரியம், கருநீல மாணிக்கம் எனப் பலவகையில் பெறுமதி மிக்க இரத்தினக் கற்கள் எமது மண்ணில் காணப்படுகின்றன. இவை அகழ்தெடுப்பதில் தனிப்பெரும் சிறப்பு கொண்ட மாவட்டமாக இலங்கையின் இரத்தினபுரி விளங்குகிறது. இது உவைல ழுக பநஅ என்ற சிறப்பு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்டத்தில் கஹவத்தை, பெல்டுமல்லை, களவானை, கரபின்சை, குருவிட்ட ஆகிய பிரதேசங்களில் பெருமளவில் இரத்தினக்கல் அகழ்வதை தமது சொந்தத் தொழிலாக மேற்கொள்ளும் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர்.

ஒரு இரத்தினக்கல் ஒருவரது வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றிவிடும். அவ்வகை பெறுமதி கொண்ட கற்களை அகழ்ந்தெடுப்பது அவ்வளவு எளிதல்ல. அந்த உழைப்பின் மறுபுறம் காணப்படுகின்ற நிறை குறைகளை இரத்தினபுரியில் இரத்தினக்கல் அகழும் ச.சஜீத் எனும் தொழிலாளியின் 15 வருட கால தொழில் சார்ந்த அனுபவத்தின் பேரில் அவரும் அவரது தொழில் சார் சகபாடிகளும் அனுபவித்த தொழில் சார் இன்னல்களையும் மனக் குமுறல்களையும் அறிந்திடுவோம்.

சொந்த நிலம் இருந்தால் இரத்தினங்கல் அகழ்வை எவருக்கும் அடிமையின்றி மேற்கொள்ளலாம் .ஆனால் அதற்கு அரசு தரப்பில் இருந்து அனுமதி பத்திரம் பதிவு செய்து வைத்திருத்தல் அவசியம். எம்மை போன்ற தினக் கூலிக்கு அதற்கு கொடுப்பனவு இல்லை. தனி ஒரு முதலாளியின் கீழ் எமது சொந்த நிலங்களை விற்று அடிமையாகவே தொழில் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே எம்மில் பலருக்கு காணப்படுகின்றது.

முதலில் நிலவளம் பார்த்து வயலும் வயல் சார்ந்த நிலங்களிலேயே இவ்வகழ்வு தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. அரசு அனுமதி பத்திரம் இருந்தால் முறை சார்ந்தும் அனுமதிப்பத்திரம் இல்லாத இடத்தில் முறைசாரா வழிமுறைகளிலும் இரத்தினகற்கள் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது.

முறைசாரா வகையில் எனப்படுவது அனுமதி பத்திரம் அற்ற நிலங்களில் எவரும் தெரியாவண்ணம், பொலிஸார் அறிந்திடாத வகையிலும் இரவு வேளைகளில் நிலத்தைக் குடைந்தெடுக்கும் பாணிகள் மேற்கொள்ளப்படும்.

எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் இவ்வகை முறைசாரா அகழ்வுகள்ஓரளவுமேற்கொள்ளப்படுகின்றன. இரத்தின கற்கள் அகழ்வுக்கு முன், நிலத்தைத் தெரிவு செய்து பின்னர் குறிப்பிட்ட நிலத்தின் முதலாளி என்பவர் தொழிலாளர்களாக எம்மில் ஐவரையோ அல்லது பத்து நபர்களையோ தொழிலுக்காக தெரிவு செய்வார். தினக் கூலியாக முதலாளியிடம் இருந்து ஒரு தொகைப் பணமாக 1200 தொடக்கம் 1500 ரூபாவரை வழங்கப்படும்.

ஆனால் குறித்து நிலத்திலிருந்து அகழ்தல் மூலம் கிடைக்கும் இரத்தின கற்கள் பெறுமதியின் பணமானது பங்குகளாகக் குறித்த தொழிலாளிகளுக்கு வழங்கப்பட மாட்டாது. மாறாக ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதன் அடிப்படையில் நில உரிமையாளர்களிடம் அல்லது முதலாளியிடம் தினக் கூலியாகப் பணமேதுமின்றி உணவு மற்றும் தேனீர் என்பன வழங்கப்படும். அதேவேளை ஒரு குறிப்பிட்ட அளவு பங்குகளும் தொழிலாளர்களுக்காக கிடைக்கப்பெறும்.

வயல் சார்ந்த களி மண் நிலத்தில் பொருத்தமான களிமண் சார் மண் வகை இருக்கின்றதா என்று அறியத் தாமே வடிவமைத்த இரும்பிலான நீண்ட கூர்மையான கம்பியைக் கொண்டு குறித்த நிலத்தில் குத்துவதன் மூலம் அறிய வேண்டும். குறித்த மண் காணப்பட்டால் இரும்பு கம்பியானது நிலத்துக்குள் சிறிய கற்களுக்கு இடையில் ஊடுருவி செல்வது போன்ற உணர்வே தரும். அதனை அறிந்த பின்பு இரண்டு வழிமுறைகளில் இரத்தின கல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது.

குவியல் மண்ணரித்தல் சார் அகழ்வு, நிலத்தைக் குடைந்து செல்லும் அகழ்வு. இது ஆழமான அகழ்வு முறை. தட்டடித்து அகழ்தல் என்று அழைக்கப்படுகின்றது.

குவியல் முறை அகழ்வு கை கொடுக்காத பட்சத்தில களிமண் காணப்படும் மற்றொரு இடத்தில் அகழ்வை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும். அது குகை மாதிரி அமைந்த அகழ்வு முறை. தட்டடித்து நிலத்தைக் குடைந்தெடுத்தல் என்ற முறையில் அமையும். இது மிகவும் ஆபத்தான பொறிமுறையாகும். நிலத்தில் இள்ளம் மண் வகை கிடைக்கும் வரை குடைந்தெடுத்தல் எடுத்தல் இதன் செயற்பாடாகும். இது சுமார் 100 அடிவரை அல்லது அதற்கு மேற்பட்ட அளவிலும் செல்ல வாய்ப்புகள் உண்டு.

பாக்கு மரங்களின் அல்லது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வியர்வை படிந்திருக்கும்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

தென்னை மரங்களின் சீவியப் பலகை களையும் மரக்கட்டைகளையும் கொண்டு குடைந்தெடுக்கும் குழியின் நான்கு பக்கங்களிலும் இறுகச் சொருகி இரண்டு அடிவரையான அளவு கொண்டதாக தட்டுகளை வடிவமைத்து மெது மெதுவாகக் குடைந்து இள்ளம் சார் களிமண்ணை தேடி செல்வோம். இவ்வாறு தோண்டப்படும் உச்சபட்ச ஆழம்வரையிலும் மண் சரிவுகளை தடுக்கவும் பாதுகாப்பு கருதியும் தட்டுக்கள் நிர்மாணிக்கப் பட்டிருக்கும்.

குறைந்தது ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை செயற்படுத் தப்படலாம். இவ்வாறான காலகட்டத்தில் எமது குடும்பம் சார் சூழ்நிலை மறந்து உழைக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. பங்குக்காக உழைக்க நேரிடும் போது வீட்டு செலவுக்காக கொடுத்து உதவ எம்மவர் கைகளில் பணம் ஏதும் இருப்பதில்லை. அக்காலப் பகுதியில் வீட்டாளர்களும் அரை வயிறு பசியுடன் காலம் கடத்த வேண்டி நேரிடும்.

தட்டடித்து அகழும் போது குறிப்பிட்ட ஆழத்துக்குச் சென்ற பின்னர் மாலா மண் வகை காணப்படும். இச் சந்தர்ப்பங்களை மிகவும் சவாலாக கையாள வேண்டும். மாலா மண் வகை 24 செல்சியஸ் பாகை வெப்பநிலை கொண்ட களிமண் வகையாகும். இது வேலை செய்யும் தொழிலாளர்களின் பாதங்களை வெப்பமாக்கும். இம்மண் நீருடன் தாக்கமுறும் போது கொதி நீரை போன்ற தாக்கத்தை ஏற்படுத்தும் அவை பெரும் அச்சுறுத்தலா சந்தர்ப்பமாகும்.

நூறு அடி ஆழத்தில் செல்ல நேரும் போது உள்ளே செல்லும் அனைவரும் தமது சுவாசம் சார்ந்து கரிசனையோடு இருத்தல் அவசியம். அகழும் குழிக்கு மேலிருந்து கீழ் நோக்கி அனுப்பப்படும் ஒட்சிசன் சிலிண்டர்களில் பொருத்தப்பட்டிருக்கும் வெற்றுக் குழாய் ஊடான செயற்கை சுவாச பொறிமுறை மூலமே சில சந்தர்ப்பங்களில் சுவாசிக்க நேரிடும் . காரணம் நிலத்துக்கடியில் குறிப்பிட்ட ஆழத்துக்கு அப்பால் ஒட் சிசன் அளவு குறைவாக காணப்படுகின் றமையே ஆகும். அதிக ஆழத்துக்குச் செல்ல முன்னர் உணவு உட்கொண்ட பின்னர் செல்வது அவசியம் ஆகும்.

வேறு தேவைகளின் நிமித்தம் மீண்டும் நிலத்தை நோக்கி மேலே வந்து செல்வது கடும் சிரமத்துக் குள்ளான விடயம் ஆகும். அதிக ஆழம் செல்வது ஆபத்தானது சில சந்தர்ப்பங்களில் மூச்சுத் திணறல் மயக்கம் என்பன எம்மில் பலருக்கு ஏற்படும். அவர்களை உடனடியாக மேலே நிலத்தை நோக்கி அனுப்பி விடுவோம்.

ஒரு சிலருக்கு அதுவே வாழ்நாளில் கடைசித் தருணமாகவும் அமையக் கூடும். என்று மற்றும் ஒரு அகழ்வு தொழிலாளியான பா. குணசீலன் குறிப்பிடுகின்றார். மரக்கட்டை மூல மான தட்டுக்கள் நிர்மாணித்து செல்லல் பெருமளவு சாத்தியமாகாத பட்சத்தில் கற்கள, மண் போன்றன தொழிலாளர்க ளின் மேல் சரிந்து விழ நேரிடும். இவ் வாறு நேர்ந்தால் தொழிலாளர்கள் உயிரிழக்கும் சந்தர்ப்பங்களும் அதிகம். அவ்வாறு இறந்தவர்கள் எம்மில் பலர். எடுத்துக்காட்டாக இரத்தினபுரி (சிங்கள கொடை) தோட்டத்தை சேர்ந்த 42 வயதான ச.ராஜரட்ணம் மற்றும் பெல்மடுகளை சேர்ந்த 21 வயதான வ.மோகன்ராஜ் இவ்விருவரும் கடந்த 2019 ஆம் வருடம் அவ்வாறானது ஒரு அழுத்தத்தில் உயிரிழந்துள்ளனர்.

இது நிரந்தரமற்ற தொழில் அல்ல என்ற காரணத்தால் வங்கிகளில் இருந்தோ அரசு தரப்பிலிருந்தோ எவ்வித சலுகைகளும் கிடைப்பதில்லை என்பதும் வருத்தத்துக்கு உரிய விடயமாகின்றது. எனவேதான் இரத்தினக்கல் அகழும் தொழிலாளர்கள் அனைவரும் பணம் படைத்தவர்கள் அல்ல என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**இ.நிரோஷிகா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைகழகம்.

# வன்முறைகளைக் குறைத்தல் தொடர்பாகக் கலந்துரையாடல்

**(வி.ரி. சகாதேவராஜா)**

சிறுவர் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக் குறைப்பு மற்றும் உளவளத்துணை தொடர்பான கூட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக பிரிவில் நடைபெற்றது.





பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற நிகழ்வில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துக்கள் பகி ரப்பட்டன.

எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கும் விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக சிறுவர் பாடசாலைகளில் இடைவிலகலை கட்டுப்படுத்தல், சிறுவர் பாதுகாப்பு மிகுந்த நிலையான குடும்பச் சூழலை உருவாக்குதல், சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் தராதரங்களை கண்காணித்தல், பல்துறை சார்ந்த ஒருங்கிணைப்புகளை பலப்படுத்தல், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பை பெற்றுக் கொடுத்தல், குடும்ப வன்முறைகளை குறைப்பது தொடர்பில் கையாளப்பட வேண்டிய விடயங்கள், உளநல பாதிப்புற்றோர் தொடர்பில் கையாள வேண்டிய நடவடிக்கைகள்என பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரன் கலந்து கொண்டார்.

அத்துடன் வலயக் கல்வி அலுவலகம், பொலிஸ் திணைக்களம், சுகாதாரத் திணைக்கம், அரச சார்பற்ற நிறுவனங்கள், சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் போன்ற வற்றின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.



# காச நோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(றியாஸ் ஆதம், அ.அஸ்வர்)

கல்முனை பிராந்தியத்தில் பொதுச் சுகாதாரம், தொற்று நோய் மற்றும் தொற்றா நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற பிரிவு தலைவர்களுக்கான கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு கட்டமாகக் கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட காச நோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் (19) மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலை மண்டபத்தில் இடம் பெற்றது.

மத்திய முகாம் பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் கே.ஐ.ஈ.கொடிக்கார ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட மார்பு சிகிச்சை பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.அப்துல் கபூர் வளவாளராகக் கலந்துகொண்டார்.

# மட்டக்களப்பு மாணவர்களுக்கு விமானப் பயண விழிப்புணர்வு



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு சிவில் விமானப் போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையால் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திக்கான மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் வின்சன்ட் உயர்தர மகளிர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (19) இது இடம் பெற்றது.

முதல் தடவையாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் இளைஞர், யுவதிகளை உள்வாங்குவதற்கான செயற்றிட்டமாக இத்திட்டம் அமைந்திருந்தது.

விமானத்துறையில் ஆர்வமுள்ள மாணவ, மாணவிகள் எதிர்காலத்தில் இத்துறையில் காணப்படும் தொழில் வெற்றிடங்களை நிரப்புவதற்கான முன்னாயத்தங்கள், அடிப்படைத் தகைமைகள் தொடர்பாகவும், இத்துறையில் உள்ள தொழில்நுட்ப முறைமைகள், சவால்களை எவ்வாறு கையாள்வது போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் இதன்போது துறைசார் அதிகாரிகளினால் மாணவர்களுக்கு விரிவான விளக்கங்கள் அளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா கலந்து கொண்டார்.

நிகழ்வில் விமானப்படை உயர் அதிகாரி பிரபாத் குளரத்ன, விமானி கப்டன் எஸ்.ஸ்ரீதரன் சேகரம், வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி.சுஜாதா குலேந்திரகுமார், வின்சன் உயர்தர மகளிர் தேசிய பாடசாலை அதிபர் திருமதி.திருமகள் உதயகுமார் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# சாய்ந்தமருது கடல் அரிப்பைத் தடுக்க 55 மில்லியன் ரூபா நிதி செலவாகும்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முதற்கட்டமாக 35 மில்லியன் ரூபா வழங்க முடிவு

**(நூருல் ஹுதா உமர் )**

சாய்ந்தமருது கடல் அரிப்பைத் தடுக்க 55 மில்லியன் ரூபா நிதி செலவாகும் என்று மதிப்பீடு டிசய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் முதற்கட்டமாக 35 மில்லியன் ரூபா வழங்கி வேலைகளை ஆரம்பிக்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மீதி 20 மில்லியன் ரூபாவைத் திறைசேரி ஊடாகப் பெற்றுத் தர நடவடிக்கை எடுப்பாரன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருது கடல் அரிப்பு தொடர்பாக நகர திட்டமிடல் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் கொழும்பில் நேற்று கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் மேலதிக செயலாளர் மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்கள மாகாண பொறியியலாளர் ஆகியோர் சாய்ந்தமருதின் தற்போதைய கடலரிப்பு நிலைகளையும், எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய விடயங்களையும் அமைச்சர் மற்றும் கூடியிருந்த சபைக்கு விளக்கினர்.

கடலரிப்பின் அகோரம் காரணமாக மீனவர் வாடிகள், பள்ளிவாசல், அரச கட்டடங்கள், சிறுவர் பூங்காக்கள் பாதிக்கப்பட்ட விடயம் தொடர்பில் விளக்கினர்.

மீனவர்களின் மீன்பிடி முற்றாக கடலரிப்பால் பாதிக்கப்பட்ட விடயத்தை சபைக்கு முன்வைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ், கடலரிப்பை தடுப்பது தொடர்பில் உள்ள அவசர நிலையை அமைச்சருக்கு விளக்கினார்.

நிந்தவூரில் முன்னெடுக்கப்பட்டது போன்று நிரந்தரமான தீர்வு வழங்கப்பட்டு மீனவர்களுக்கு அவர்களின் தொழிலைச் செய்ய வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்று இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது.

மூன்று தடுப்பு சுவர்களை முதலில் ஆரம்பித்து தொடர்ந்தும் தடுப்பு சுவர்களை அமைக்க வேண்டிய விடயத்தையும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தினார்.

இந்தப் பணியை முன்னெடுக்க 55 மில்லியன் ரூபா அளவில் செலவாகும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் எ. எல். எம். அதாவுல்லா, இந்த விடயத்தைக் கால தாமதம் செய்யாமல் அவசரமாக ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார். அதன் அவசியத்தை வலியுறுத்தினார். இதனால் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சவால்களையும் சபைக்கு ஆழமாக விவரித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எ.எம். ஜமீல் , சாய்ந்தமருது பிரதேச முன்னாள் செயலாளர் எ.எல். எம். சலீம், கல்முனை மாநகர சபை முன்னாள் முதல்வர் சிராஸ் மீராஷாகிப் ஆகியோரும் கருத்துக்களை முன்வைத்தனர்.

கூட்டத்தின் சகல விடயங்களையும் கேட்டறிந்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கைவசமுள்ள 35 மில்லின் ரூபாவைக் கொண்டு வேலைகளை அவசரமாக ஆரம்பிக்குமாறு பணித்தார். மீதி 20 மில்லியனை திரைசேரி மூலம் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆலோசகரும், முன்னாள் அமைச்சருமான நிமால் லான்ஸா இதன்போது உறுதியளித்துள்ளார்.

# ஆலையடிவேம்பு கோட்டத்தில் ஆறுபேருக்குக் குரு பிரதீபா!

**(வடிவேல் டினேஸ்)**

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு கோட்டத்தில் ஸ்ரீ இராம கிருஷ்ணா கல்லூரி தேசிய பாடசாலையை சேர்ந்த ஐவருக்கு குரு பிரதீபா விருது நேற்று முந்தினம் (19) செவ்வாய்க்கிழமை மாகாணக் கல்வி பணிப்பாளரால் வழங்கிக் கௌரவிக்கப் பட்டது. பாடசாலை வரலாற்றில் ஐவருக்கு ஒரே தடவையில் விருது வழங்கப்பட்டமை இதுவே முதல் தடவையாகும்.

சிறந்த தலைமைத்துவத்துக்கான விருது பாடசாலையின் அதிபர் டேவிட் அமிர்தலிங்கம் (பாடவிதானம்), பிரதி அதிபர் மு.ஜயந்தன், பிரதி அதிபர் ஊ.மதியழகன் (நிர்வாகம்), திருமதி. நீரஜா அகிலன் (பாடசாலை ஒழுக்காற்று, சமுகத் தொடர்பு), திருமதி. ஆ.ஜீவிதா (பாடசாலை மாணவர் தலைமைத்துவ திறன் விருத்தி) ஆகியோருக்கே இந்த விருதுகள் கிடைத்துள்ளன.

அக்கரைப்பற்று புனித சவேரியார் வித்தியாலயத்தில் சிறந்த அதிபர் சேவை செய்தமைக்கான குரு பிரதீபா விருது அக்கரைப்பற்று பெருநாவலர் வித்தியாலய அதிபர் சி.மணிவண்ணனுக்கு வழங்கப்பட்டுள்ளது.





# ஓய்வு நிலையில் கௌரவிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை, நற்பிட்டிமுனை சமுர்த்தி வலயத்தில் பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தராக கடமையாற்றிய எம்.ஜெமீல் தனது 57 வயதில் 27 வருடங்கள் சேவையின் பின்னர் முன் ஓய்வு நிலை அடைந்தார்.

இந்நிலையில் அவர் உயரதிகாரிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கினார்.

அதேபோல அனைத்து உத்தியோகத்தர்களும் அவரது சேவையைப் பாராட்டி அவருக்குப் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி மற்றும் நினைவுச்சின்னம் வழங்கிக் கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ், பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி, கணக்காளர் எம்.அமீரலி மற்றும் சிரேஷ்ட தலைமை சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ் உட்பட சகல சமுர்த்தி முகாமையாளர்களும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

# உலக தற்கொலை தடுப்பு தின விழிப்புணர்வு கருத்தரங்குகள்

(வி.ரி. சகாதேவராஜா)

உலக தற்கொலை தடுப்பு தினத்தினை முன்னிட்டு கல்முனை வலய பாடசாலைகளில் கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது.

வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரனின் வழிகாட்டலில் கல்முனை கால்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை உவெஸ்லி தேசிய பாடசாலை மற்றும் கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் இந்தக் கருத்தரங்குகள் முதற் கட்டமாக நடைபெற்றன.

நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்கேற்ற இந்நிகழ்வில் வைத்தியசாலையின் மனநல பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் டாக்டர் யூ.எல். சராப்டீன், தாதிய உத்தியோகத்தர்களான அழகரட்ணம், திருமதி.நி.மனோஜினி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

வைத்தியசாலையின் மனநல பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் டாக்டர் சராப்டீன் மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தம் மற்றும் தற்கொலை உணர்வை தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வை வழங்கினார்.

மன அழுத்த நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தில் வைத்தியசாலையை தொடர்பு கொள்ள வேண்டிய 1926 என்ற தொலைபேசி இலக்கமும் இதன்போது வழங்கப்பட்டது.

மனச்சோர்வு சம்மந்தமான மாணவர்களின் வினவிய சந்தேகங்களுக்கான விளக்கம் மற்றும் , நிகழ்வு தொடர்பான ஆசிரியர்கள் மாணவர்களுடனான கலந்துரையாடல் இடம் பெற்றன.











# திலீபனின் நினைவேந்தல் துண்டுப் பிரசுரம் வழங்கல்

தியாக தீபத்தின் நினைவேந்தலை முன்னிட்டு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் விநியோகம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பொது சந்தை, பாடசாலைகள், பேருந்து நிலையங்களில் தியாக தீபத்தின் வரலாற்று நினைவுகளை உள்ளடக்கிய துண்டுபிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்திலும் துண்டுபிரசுரம் விநியோகிக்கப் படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். நகர் வீட்டில் திருடியவர் கைது!

யாழ். நகர் பகுதியில் வீடொன்றில் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர்கள் வீட்டில் திருடிய கைபேசி மற்றும் பணத் தொகை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

யாழ். நகர் பகுதியை அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றில் கடந்த 16ஆம் திகதி திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அதன்போது வீட்டில் இருந்த பெறு மதியான கையடக்க தொலைபேசி ஒன் றும் ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டிருந்தது.

அது தொடர்பில் வீட்டு உரிமையாளரால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதன் பிரகாரம், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவந்த நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை (19) கொழும்புத் துறை பகுதியில் வைத்து சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் விசாரணை நடத்தியதன் அடிப்படையில், குறித்த வீட்டில் திருடப் பட்ட கையடக்கத் தொலைபேசியும், ஒரு தொகை பணமும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

# கனடா பிரஜைகளுக்கான விசாவை இடைநிறுத்தியது இந்திய அரசு!

மறு அறிவிப்பு வரும் வரை கனடா பிரஜைகளுக்கு விசா வழங்குவது இன்று முதல் இடைநிறுத்தப்படுகிறது என இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது,

இது தொடர்பாக விசா வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள தனியார் நிறுவனமான பிஎ.ல்.எஸ். இன்டர்நேஷனல் தனது இணையதளத்தில் வெளியிட்டுள்ள அறிவிப்பில், செயல்பாட்டுக் காரணங்களுக்காக, இன்று முதல், அடுத்த அறிவிப்பு வரும் வரை இந்திய விசா சேவை நிறுத்தப்படுகிறது. மேலும், தகவல்களுக்கு பி.எல்.எஸ். இணைய தளத்தைப் பாருங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீக்கிய பிரிவினைவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய அரசின் முகவர்களுக்கு தொடர்பு இருக்கிறது என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியதன் தொடர்ச்சியாக இரு நாடுகளுக்கு இடையேயான தூதரக உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், தற்பொழுது விசா தொடர்பான இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப் பிரிவின் தலைவரும், தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் போட்டோக்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் தகவல் வெளியிட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக, நாடாளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்திய அரசின் முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலைக்கும் தொடர்பு




இருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன என்று கூறினார்.

ஆனால், ஜஸ்டின் ட்ரூடோவின் குற்றச்சாட்டுகளை இந்திய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது. கனடா வில் நிகழ்ந்த வன்முறைச் செயலுக்கு இந்திய அரசுக்கு தொடர்பு இருப்பதாக தெரிவித்துள்ள குற்றச்சாட்டு அபத்தமானது. இது உள்நோக்கம் கொண்டது. இதற்கு முன்பும் இதுபோனற குற்றச்சாட்டுகள் கனடா பிரதமரால் இந்திய பிரதமரிடம் தெரிவிக்கப்பட்டன. அப்போதே அவை முற்றிலும் நிராகரிக்கப்பட்டன என்று இந்திய வெளியுறவுத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜார் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவது தொடர்பாக இந்தியா மற்றும் கனடா இடையே நடந்து வரும் மோதலைக் கருத்தில் கொண்டு இந்தியாவில் வசிக்கும் தனது குடிமக்களுக்கு கனடா அரசு கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டது. அதன் தொடர்ச்சியாக இந்தியாவும் கனடா வாழ் இந்தியர்களுக்கு தேவையான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்களை நேற்று வழங்கியுள்ளது.

கனடாவில் அதிகரித்து வரும் இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் அரசியல் ரீதியான வெறுப்பு குற்றச்சாட்டு வன்முறைகளை கருத்தில் கொண்டு அங்கு வாழும் இந்திய குடிமக்கள், மாணவர்கள் மிகுந்த கவனமுடன் செயல்படவேண்டும். அங்கு பயணம் மேற்கொள்ள நினைப்பவர்களும் முன்னெச்சரிக்கை மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

கனடாவிலிருந்து இந்திய தூதரை வெளியேற அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ள சூழ்நிலையில் அங்கு அத்தியாவசியமில்லாத பயணங்களை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும். ஏனெனில், அங்குள்ள பல குழுக்கள் நமக்கு எதிராக செயல்பட வாய்ப்புள்ளது. கனடாவில் வசிக்கும் இந்திய சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வை உறுதி செய்வதற்காக கனடா அதிகாரிகளுடன் இந்திய தூதரகம் எப்போதும் தொடர்பில் இருக்கும்.

விரும்பத்தகாத நிகழ்வுகளின் சூழ்நிலைகளின்போது ஒட்டாவாவில் உள்ள இந்திய தூதரகம் அல்லது டொரண்டோ மற்றும் வான்கூவரில் உள்ள துணைத் தூதரக அதிகாரிகளை தொடர்பு கொள்ள வேண்டும். வலைத ளங்கள் மூலமாகவும் கனடாவாழ் இந்தியர்கள் உதவி கோரலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரபரப்பான விமான நிலையமாக தரவரிசையில் முதலாவதாக டுபாய்

டுபாய் சர்வதேச விமான நிலையமானது ஆசிய - பசுபிக் மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மிகவும் பரபரப்பான மற்றும் சிறந்த சேவையை வழங்கும் விமான நிலையமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச விமான நிலைய கவுன்சில் ஆசியா - பசுபிக் மற்றும் மத்திய கிழக்கு வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, டுபாய் விமான நிலையம் பிராந்தியத்தில் உள்ள மற்றைய விமான நிலையங்களை விடவும் சிறந்த



சேவையை வழங்குகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, டுபாய் விமான நிலையமானது இந்த ஆண்டின் முதல் பாதியில் 41.6 மில்லியன் பயணிகளைக் கையாண்டுள்ளது என பதிவாகியுள்ளது.

இது கடந்த 2019 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களை விட சற்று அதிகமாகும் எனவும், டுபாய் விமான நிலையம் இவ்வாண்டின் முதல் பாதியில் மொத்தம் 201,800 விமானங் களைக் கையாண்டள்ளது என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

டுபாய் விமான நிலையமானது 104 நாடுகளில் 255 இற்கும் மேற்பட்ட இடங்களுக்கும் 90 இற்கும் மேற்பட்ட சர்வதேச விமான நிறுவனங்களுக்கும் சேவையை வழங்கி வருகின்றது.

# 8 மக்களவை தொகுதிகளை இழக்கும் நிலையில் தமிழகம்!

## ஆய்வறிக்கையில் தகவல்



மக்கள் தொகை அடிப்படையில் 2026 ஆம் ஆண்டுக்குப்பின், மக்க ளவை தொகுதிகள் மறுவரையறை செய்யப்படும்போது, தமிழகம் உட்பட தென் மாநிலங்களில் மக்களவை தொகுதிகள் எண்ணிக்கை குறையும் எனவும், உத்தர பிரதேசம் உட்பட வட மாநிலங்களில் தொகுதிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், தென் மாநிலங்களவை விட, வடமாநிலங்களில் மக்கள் தொகை எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கிறது. 2026 ஆம் ஆண்டுக்குப்பின் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்பு தொகுதி மறுவரையறை பணிகள் மேற்கொள்ளப்படும்.

மக்கள் தொகை எண்ணிக்கை அடிப் படையில் மக்களவை மற்றும் சட்டமன்ற தொகுதிகள் மறு சீரமைப்பு செய்யப்படும்.

அப்போது உத்தர பிரதேசத்துக்கு 11 மக்களவை தொகுதிகள் கூடுதலாக கிடைக்கும். தமிழகத்தில் 8 மக்களவை தொகுதிகள் வரை குறைந்து 31 மக்களவை தொகுதிகளாக மாறலாம். 42 தொகுதிகள் உள்ள ஆந்திரா, தெலங்கானாவில் மக்களவை தொகுதிகளின் எண்ணிக்கை 34 ஆக குறையலாம்.

இதேபோல் கேரளாவிலும் மக்களவை தொகுதிகள் எண்ணிக்கை 20 இலிருந்து 12 ஆக குறையலாம். கர்நாடகாவில் மக்களவை தொகுதிகள் 28 இலிருந்து 26-ஆக குறையலாம். தொகுதி மறுவரையறையின் முக்கிய நோக்கமே, ஒவ்வொரு தொகுதியிலும், ஓரளவு சமமான எண்ணிக்கையில் வாக்காளர்கள் இருப்பதை உறுதி செய்வதுதான். அப்போதுதான், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் நியாயமான பிரதிநிதித்துவம் இருக்கும்.

தொகுதி மறுவரையால் உ.பி.க்கு 11 தொகுதிகளும், பிஹாருக்கு 10 தொகுதிகளும், ராஜஸ்தானுக்கு 6 தொகுதிகளும், மத்திய பிரதேசத்துக்கு 4 தொகுதிகளும், குஜராத், ஹரியாணா, ஜார்க்கண்ட், டெல்லி மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு தொகுதிகள் அதிகரிக்கலாம்.

தொகுதி வாக்காளர்கள் அடிப்படை யில், உத்தர பிரதேசத்தில் தற்போது ஒரு எம்.பி. 30 லட்சம் பேரின் பிரதிநிதியாக உள்ளார். ஆனால் தமிழகத்தில் ஒரு எம்.பி 18 லட்சம் பேரின் பிரதிநிதியாக உள்ளார்.

தொகுதி மறுவரையறைக்கு மத்திய அரசு கடந்த 1976 ஆம் ஆண்டு தடை விதித்தது. இந்த தடை தற்போது 2026 ஆம் ஆண்டு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த தடை காரணமாக நாடா ளுமன்றத்தில் சமநிலையற்ற பிரதி நிதித்துவம் உள்ளது. மக்கள் தொகை கணக்கெடுப்புக்குப்பின், நியாயமான பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் தொகுதிகள் மறுவரையறை செய்யப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## தமிழக எம்.பி.க்கள் குறையக் கூடாது!

### - மத்திய அரசிடம் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தல்



மகளிர் இடஒதுக்கீட்டை தி.மு.க. வரவேற்கின்றது எனவும் தொகுதி மறு வரையறையில் தமிழக எம்.பி.க்கள் எண்ணிக்கை குறைக்கப்படாது என்ற உத்தரவாதத்தை மத்திய அரசு அளிக்க வேண்டும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டா லின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமை திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்பு சட்டம் மற்றும் முற்பட்ட சாதியினருக்கு 10 சதவீதம் இடஒதுக்கீடு சட்டம் போன்றவற்றை கடும் எதிர்ப்புக்கு இடையே பிடிவாதமாக நிறைவேற்றிய பா.ஜ.க. அரசு, அவற்றுக்கு காட்டிய அவசரத்தை மகளிர் சட்டமூலத் துக்கு கடந்த 9 ஆண்டுகளாக காட்டவில்லை.

இப்போது நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், தோல்வி பயம் வாட்டி வருவதால் மகளிருக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீட்டை வழங்கி சாதனை செய்துவிட்டோம் என்று காட்டிக் கொள்கின்றனர்.

பெண்களுக்கு உள்ளாட்சி அமைப் புகளில் 33 சதவீதம் இடஒதுக்கீட்டை மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி 1996 இல் வழங்கினார். அதுதான் இன்று 50 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மகளிர் மசோதாவை வரவேற்கும் வேளையில், மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களுக்கு எந்தத் தீங்கையும் செய்துவிட மாட் டோம் என்ற உத்தரவாதத்தை வழங்கி, மக்களின் அச்சத்தை போக்க வேண்டும் என்று பிரதமரை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

## நீட் தேர்வை நிறுத்த வேண்டும்: வைகோ கோரிக்கை

மருத்துவப் படிப்புகளுக்கு நீட் தேர்வு நடத்துவதை மத்திய அரசு நிறுத்த வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியு றுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில், மருத்துவப் படிப்புகளுக்கு நீட் நுழைவுத் தேர்வு தான் தகுதி என்று பா.ஜ.க. அரசு விடாப்பிடியாக இருந்து வருகிறது.

மருத்துவக் கல்விக்கு நீட் என்பது ஒரு மோசடியான தகுதித் தேர்வு என்பது தெரிகிறது. தமிழ்நாட்டில் நீட் தேர்வு காரணமாக 20 மாணவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டு ள்ளனர். இதே நிலைதான் பிற மாநிலங்களிலும் இருக்கிறது. எனவே பா.ஜ.க. அரசு மருத்துவப் படிப்புக ளுக்கு நீட் தேர்வு நடத்துவதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.